பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 67 நாள்:14.05.2019

**பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் இலவச தொழிற்பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் 03.06.2019க்குள் வரவேற்கப்படுகின்றன.**

சென்னைப் பள்ளிகளில் படித்த மாணவ மாணவியர்களின் எதிர்காலம் சிறக்க மத்திய அரசின் NCVT சான்றிதழுடன் கூடிய தொழிற்பயிற்சி கீழ்காணும் தொழிற் பாடப்பிரிவுகளில் அளிக்கப்படுகின்றது.

| வ. எண் | பயிற்சி வகுப்புகள் | பயிற்சி காலம் | சேர்க்கை எண்ணிக்கை | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (Computer) | 1 வருடம் | 48 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | குழாய் பொருத்துநர் (Plumber) | 1 வருடம் | 48 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3 | பொருத்துநர் (Fitter) | 2 வருடம் | 20 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் (Motor Mechanic Vehicle) | 2 வருடம் | 24 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | மின்பணியாளர் (Electrician) | 2 வருடம் | 20 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 6. | எலக்ட்ரானிக் மெக்கானிக் (ElectronicMechanic) | 2 வருடம் | 24 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| **மொத்தம்** | | | **184** | |

சென்னைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும் மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்து மீதி காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் உள்ள பிற பள்ளிகளில் படித்த ஏழை எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் விதிகளின்படி சேர்க்கை வழங்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தின் சிறப்பு அம்சம் முற்றிலும் இலவச பயிற்சி அளிப்பதுதான். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவச சீருடை, இலவச பேருந்து பயண அட்டை மற்றும் பயிற்சி காலத்தில் மாதந்தோறும் ரூ.500/– பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. மேலும் இலவச மடிக்கணினி வழங்கப்பட உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடித்த பயிற்சியாளர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்று தரப்படுகிறது.

2019ம் கல்வியாண்டிற்கு பயிற்சியில் சேர விண்ணப்பப்படிவம் கீழ்கண்ட முகவரியில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்து சேர வேண்டிய **கடைசி நாள்: 03.06.2019** ஆகும். விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்த அனைவரும் சேர்க்கைக்காக **06.06.2019** அன்று காலை 10 மணிக்கு கீழ்காணும் முகவரியில் நடைபெறும் கலந்தாய்வில்

அனைத்து அசல் சான்றிதழ்களுடன் (பள்ளி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ்) கலந்துகொள்ள வேண்டும். கலந்தாய்வின்போது விண்ணப்பதாரரின் மதிப்பெண் தகுதி தரவரிசையின்படி மற்றும் அரசு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்து கலந்தாய்வு தினத்தன்றே பயிற்சியில் சேருவதற்கான அனுமதி வழங்கப்படும். பயிற்சியில் சேர வயது வரம்பு 15 முதல் 40 வயது ஆகும். பெண்களுக்கு வயது வரம்பு கிடையாது.

<u>முகவரி :</u>

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம்,
'E' டிப்போ லாரி நிலையம் ரோடு, முத்தையா தெரு அருகில், லாயிட்ஸ் காலனி,
இராயப்பேட்டை, சென்னை–14.
**தொலைபேசி எண் :** 044 – 28473117
**<u>பஸ் நிறுத்தம்</u> :** ஐஸ் அவுஸ் காவல் நிலையம் அருகில் அல்லது எல்லோ பேஜஸ்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**